ஐயமும்! தெளிவும்!!

**ஐயம் :** மார்க்கத்தில் பிரிவினையை உண்டாக்காதீர்கள் என இறைவன் குர்ஆனில் கூறுவதைக் கண்டும், நீர் 'ஜமாஅத் அல் முஸ்லிமீன்' என்ற புதிய பிரிவை உண்டாக்கி விட்டீர். உங்கள் ஊரில் முஸ்லிம்கள் இல்லையா? உங்களுக்கு ஜமாஅத் இல்லையா? அங்கே ஊர் தலைவர் இல்லையா? செயலாளர், பொருளாளர் இல்லையா? நீர் எதற்கு புதிய தலைவர் ஆகிறீர்? அவர்களுடன் இருந்தே நன்மையைக் கூறி தீமையை எதிர்க்கக்கூடாதா? அவர்கள் திருந்திக் கொண்டுதானே இருக்கிறார்கள்? திருந்திய வருக்கு ஒரு தலைவர், திருந்தாதவருக்கு ஒரு தலைவரா? பிரிவினை செய்யாதே என மற்றவர்களுக்குக் கூறிவிட்டு, நீங்கள் பிரிவினை செய்வதில் என்ன நியாயம் இருக்கிறது?
அல் அமீன், மெட்ரோ ஃபுட்வேர், திருவனந்தபுரம்.

**தெளிவு :** உம்மத்தில் பிரிவினை இருக்கக்கூடாது என்ற உயரிய எண்ணம் தங்களிடம் இருப்பதால், தாங்கள் இதுபோன்ற வினாக்களை எழுப்புகிறீர்கள். உயரிய எண்ணம் கொண்டுள்ள தங்களுக்கு அல்லாஹ் நேரான வழியை விளங்கிக் கொள்ளச் செய்வானாக.

தாங்கள் ஒரு விஷயத்தைத் தவறாக புரிந்து கொண்டிருக்கிறீர்கள். 'ஜமாஅத் அல் முஸ்லிமீன்' என்ற பெயரில் பிரிவினை செய்வதாக தாங்கள் எம்மீது குற்றம் சுமத்துகிறீர்கள். இது உங்களின் தவறான எண்ணம், இந்தத் தவறான எண்ணத்தால் மென்மேலும் தவறாகவே சிந்திக்கிறீர்கள்.

எமது எண்ணத்தில் சுயமாக சிந்தித்து 'ஜமாஅத் அல் முஸ்லிமீன்' எனும் ஜமாஅத்தை நாமாக ஆரம்பிக்கவில்லை. முஸ்லிம்கள் அனைவருமே ஒருங்கிணைந்து 'ஜமாஅத் அல் முஸ்லிமீன்' எனும் ஒரே ஜமாஅத்தாக செயல்படவேண்டும் என, அல்லாஹ்வின் இறுதித்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் உம்மத்திற்கு உபதேசித்துள்ளார்கள்.

எங்கள் ஊரிலும் சரி, உங்கள் ஊரிலும் சரி மற்ற எல்லா ஊர்களிலும் சரி, இருக்கின்ற ஜமாஅத்துக்கள் அனைத்துமே நபி(ஸல்) அவர்கள் கூறியபடி 'ஜமாஅத் அல் முஸ்லிமீன்' எனும் பெயரில் இல்லாமல், உம்மத்தைப் பிளவுபடுத்தி வேறு பற்பல பெயர்களைச் சூட்டிக் கொண்டு தனித்தனியாகப் பிரிந்து செயல்பட்டு வருகின்றன. அவர்களில் மத்ஹபுகளைப் பின்பற்றுபவர்கள் அஹ்லுஸ் ஸுன்னத், சுன்னத்வல் ஜமாஅத், பலதரப்பட்ட தரீக்காவினர்,

ஜமாஅத்தே இஸ்லாமி SIM என இன்னும் பல பெயர்களில் பிரிவுப் பெயர்களில் நீண்டகாலமாக செயல்படுகின்றனர். இவர்களுக்கெல்லாம் ஜமாஅத் இல்லையா? தலைவர் இல்லையா? செயலாளர் இல்லையா? என நீங்கள் அவர்களைக் கேட்டதில்லை. மேலும், மத்ஹபுகளைப் பின்பற்றக்கூடாது எனக்கூறிகொள்ளும், ஹனஃபீ, ஷாஃபீ என சொல்லாதே என்றும் உங்களிடம் உபதேசம் செய்து விட்டு, தாங்கள் மட்டும் அஹ்லே ஹதீஸ் ஜமாஅத், முஜாஹித் ஜமாஅத், ஸலஃபீ ஜமாஅத், ஜமியத்துல் அஹ்லுல் குர்ஆன் வல் ஹதீஸ், என உம்மத்தைப் பிரித்துக் கொண்டவர்களிடமும் தாங்கள் இந்தக்

கேள்விகளைக் கேட்டதில்லை. ஆனால் நபி(ஸல்) அவர்களின் உபதேசத்திற்கிணங்க ‘ஜமாஅத் அல் முஸ்லிமீன் என நாம் கூறுவதில் தாங்கள் குறை காண்கிறீர்கள்.

தாங்கள் சுட்டிக் காட்டுகின்ற ஜமாஅத்களின் தலைவர்களும், செயலாளர்களும், பொருளாளர்களும் ஆக அனை வருமே, அவர்கள் நடத்தி வைக்கின்ற திருமணங்களில், நிக்காஹ் ரிஜிஸ்டரில் கூட (தஃப்தர்) மணமகன், மணமகள், வலீ, 2 சாட்சிகள் என ஒவ்வொருவரையும் முஸ்லிம் என்று மட்டும் பதிவு செய்யாமல், ஹனஃபி, ஷாஃபிஈ என்றும் பதிவு செய்கின்றனர். ‘முஸ்லிம்’ என கூறுவது எவ்வளவு அழகாய் இருக்கிறது. முஸ்லிம் சகோத ரர்களில் ஒருவரை ஹனஃபி என்றும், மற்ற வரை ஷாஃபிஈ என்றும் கூறும் போது வேறுபாடு தெரிகிறதல்லவா? முஸ்லிம்களை பிரித்தாளும் சதிதானே இது? இதற்கு திருகுர்ஆனிலும், நபிவழியிலும் எள்ளளவும் ஆதாரம் கிடையாது.

மத்ஹபுகள் இஸ்லாத்தில் கிடையாது எனக்கூறுபவர் களும், தங்களது நிக்காஹ் ரிஜிஸ்டரை ‘ஜமாஅத் அல் முஸ்லிமீன்’ என அச்சிடாமல் JAQH அஹ்லே ஹதீஸ்.... தவ்ஹீத் ஜமாஅத், என்றல்லவா அச்சிட்டிருக்கிறார்கள் (ஒரு சிலர் இப்படி செய்யாவிட்டாலும், அவர்கள் கூட அந்த இயக்கங்களின் ஆதரவாளர்களாகத்தானே இருக்கிறார்கள்).

ஜமாஅத்தார்கள் திருந்திக்கொண்டு தானே இருக்கிறார்கள் என தாங்கள் குறிப்பிடுகிறீர்கள். ஆனால் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல் தெளிவாக இருந்தும் கூட, பல பிரிவினைப் பெயர்களில் நூற்றாண்டுகளாக செயல்பட்டுக் கொண்டிருப்பது, அவர்கள் இன்னும் திருந்தவில்லை என்பதையே காட்டுகிறது. அவர்கள் திருந்துவார்கள் என நம்பிக்கை வைக்கலாம். அதற்காக அவர்களுடனிருந்து கொண்டு அவர்களைப்போல செயல்பட முடியுமா? அப்படிப் பார்த்தால், இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வேண்டாம். கிருத்துவத்திலிருந்து கொண்டே இஸ்லாத்தைப் போதித்திருக்கலாம். கிறித்துவம் அறிமுகப்படுத்தப் பட்டிருக்க வேண்டாம். யூத மதத்திலிருந்து கொண்டே கிறித்துவத்தைப் போதித்திருக்கலாம் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஜமாஅத் அல் முஸ்லிமீன் என்பது திருந்தியவர்களுக்கென்றோ, திருந்தாதவர்களுக்கென்றோ தனித்தனி ஜமாஅத் அல்ல. அனைத்து முஸ்லிம்களையும் குர்ஆன், ஹதீஸ் இரண்டின் அடிப்படையில் மட்டுமே ஒருங்கிணைக் கக்கூடிய ஒரு ஜமாஅத் ஆகும். நாம் உம்மத்தைப் பிரிக்க வில்லை. பல பிரிவுகளாக இருக்கும் உம்மத்தினரை நபி (ஸல்) அவர்கள் காட்டிய ‘ஜமாஅத் அல் முஸ்லிமீனில்’ ஒருங்கிணைக்கவே முயல்கிறோம். அனைத்து ஜமாஅத்தும் ஒருங்கிணைந்து விட்டாலோ அல்லது ஒருங்கிணைய விருப்பமுள்ள ஒரு சில ஜமாஅத்தினர் மட்டும் இணைந்து விட்டாலோ அல்லது குர்ஆனையும், ஹதீஸையும் மட்டுமே பின்பற்ற வேண்டும் என்ற கொள்கையில் இருப்பவர்கள் ‘ஜமாஅத் அல் முஸ்லிமீன்’ எனும் பெயரில் உலகில் எங்கேனும் ஒரு மூலையில் இருப்பது எமக்குத் தெரியவந்தாலும் கூட தகுதியான ஒருவரை அமீராக நியமித்து அவரின் கீழ் செயல்பட நாம் எப்போதும் தயாராகவே இருக்கின்றோம். நாம் தான் அமீர் என எப்போதுமே நாம் மார்தட்டிக் கொண்டதில்லை.

நீங்கள் கூறியுள்ள அனைத்தும் ஜமாஅத்களும் மற்ற முஸ்லிம்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டும் குறிக்கோளுடன் இவர்களாக வைத்துக் கொண்ட பெயர் களாகும். எனவே இவை அனைத்தையும் விட்டும் வெளி யேறி, முஸ்லிம்கள் அனைவரையும் ஒருங்கிணைத்துக் காட்டும் "ஜமாஅத் அல் முஸ்லிமீன்" என அல்லாஹ் பெயரிட்டு, நபி(ஸல்) அவர்கள் நடத்திக் காட்டியதும், அதனையே பற்றிப்பிடிக்கக் கட்டளையிட்டதுமான ஜமா அத்தாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். மேலும் விவரங்களுக்கு மற்றொரு சகோதரர் விடுத்துள்ள வினா வையும், அதற்கான விடையையும் படித்துப் பாருங்கள்.

--------------------------------------------------

**ஐயம் :** 'ஜமாஅத் அல் முஸ்லிமீன்' ஹதீஸின் விளக்கம் முழுமையாகப் புரியவில்லை. விளக்கவும்; இயக்கம், கழகம் போன்றவற்றை விட்டு ஒதுங்கி வாழ வேண்டும் என்பது போல் உள்ளது. விளக்கம் தரவும்; அப்படியானால் த.மு.மு.க., இஸ்லாமிய அமைப்புகளான SIO, SIM, IIM இஸ்லாமிய அரசியல் கட்சிகள், தொண்டு நிறுவனங்கள் குறித்து விளக்கவும்; இவற்றிலிருந்து அந்நஜாத் எவ்வாறு வேறுபடுகிறது; விளக்கவும்.
க. ரசூல்தீன், புரசைவாக்கம், சென்னை.

**தெளிவு :** 'விளக்கம் தரவும்' என கேட்டுள்ள தாங்கள், இயக்கம், கழகம் இவைகளை விட்டு ஒதுங்கி வாழ வேண்டும் என சரியாகவே விளங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அரசியலுக்கென ஒரு இஸ்லாமிய இயக்கம், பிறருக்கு உதவி செய்வதெற்கென சில இஸ்லாமிய அமைப்புகள், இப்படியாக உம்மத்தை தனித்தனியாக கூறுபோட வேண்டிய அவசியம் இல்லை. இப்படிக் கூறுபோடுவதால் யார் அதிக உதவிகள் செய்தது, யார் மக்களின் உரிமைகளை அதிகமாகப் பெற்றுத் தந்தார்கள் என உம்மத்துக்குள்ளேயே யார் பெரியவன் என்ற போட்டி தான் ஏற்படும். சகோதர முஸ்லிம்களை, எதிரிகளாக உருவாக்கும் முயற்சிகளே இவை என்பதை நடைமுறையில் கண்டு வருகின்றோம்.

அனைத்து நல்லதையும் உள்ளடக்கியதே இஸ்லாம். "எந்த நல்லதின்மீதும் உங்களை நான் ஏவாமல் விட்டதில்லை; (அதே போல) எந்த தீயதை விட்டும் உங்களை நான் தடுக்காமல் விட்டதில்லை" என நபி(ஸல்) அவர்கள் அறிவுறுத்தியது இஸ்லாத்தில் இருந்து கொண்டேதானே ஒழிய, அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டல்ல என்பதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

எங்களின் அமைப்புக்கள், அனைத்து நல்லதை உள்ளடக்கியதுதான் என சில அமைப்புகள் கூறிக் கொண்டாலும், பெயர் வைத்து செயல்படத் தேவையே இல்லை; நிர்வாக வசதிக்காக பெயரிட்டுக் கொள்ளலாம் என வாதிப்பவர்கள், அழகிய முன் மாதிரி நபி(ஸல்) அவர்களிடம் மட்டுமே இருப்பதாக அல்லாஹ் கூறி இருப்பதால் (அல்குர்ஆன் 33:21) தமது இறுதி காலத்திற்குள் இஸ்லாம் உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவ ஆரம்பித்து மிகப்பெரிய நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருந்த நபி(ஸல்) அவர்கள், தமது நிர்வாக வசதிக்காக ஒரு பெயர் சூட்டிக் கொள்ளாததை நினைவு கூர்ந்து, நபி(ஸல்) அவர்களின் முன் மாதிரியின் அழகைக்கண்டு திருப்தி கொண்டு, தம்மை திருத்திக் கொள்வார்களாக; குர்ஆனையும், ஹதீஸையும் மட்டுமே பின்பற்ற வேண்டும் என உபதேசிப்பவர்கள்,

உபதேசம் பிறருக்குத்தான் நமக்கல்ல என்ற ரீதியில் செயல்பட வேண்டாம். *எச்சரிக்கிறோம்.*

நடைமுறையில் நாம் கண்டு அனுபவித்து வருவது என்ன?
அல்லாஹ்வும் அல்லாஹ்வின் தூதரும் காட்டித்தராத பெயரில் செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள், அவரவர் பிரிவுகளின் பெயராலேயே பிளவுபட்டு பிரிந்து விட்டனர். தத்தமது பிரிவினர் கூறுவதுதான் சரி என தக்லீது செய்ய முற்படுகின்றனர். 'ஜமாஅத் அல் முஸ்லிமீன்' அல்லாஹ் இட்ட பெயரில் செயல்பட்டால், குர்ஆன் என்ன சொல் கிறது, ஹதீஸ் என்ன சொல்கிறது என்று, பிரச்சினைகளை குர்ஆன், ஹதீஸுடன் அணுகுவோம். பிரிவுப் பெயர்களில் செயல்படும் போது, நமது தலைவர் சொல்வதுதான் சரி என்ற ரீதியில் செயல்பட்டு, மற்ற பிரிவினரிடம் குறைகள் காண நேரிட்டு வருகிறது. இதனால் சண்டை சச்சரவு, காழ்ப்புணர்ச்சி அனைத்தும் சகோதரர்களாய் வாழ வேண்டிய முஸ்லிம்களிடம் ஏற்பட்டு விட்டது. மிகைப் படுத்தப்பட்ட விஷயங்கள் அல்ல இவை.

எல்லாவற்றிற்குமே குர்ஆனும், ஹதீஸும் தான் சரியான தீர்வைத் தருகின்றன எனக்கூறிக்கொண்ட இரு வெவ்வேறு அமைப்பினர் பள்ளிவாசல் நிர்வாகம், எந்த இயக்கத்திற்கு என்ற பிரச்சனையில் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு, நேரம், பொருள் இரு அமைப்பினர்களுக்கிடையே வீண் விரயம் செய்து, *லஞ்சம் கொடுத்து* அரசு அதிகாரிகளின் தீர்ப்பை எதிர் நோக்கி இருக்கிற நிலையை சமீபத்தில் கண்டோம். யார் பெரியவன் என ஒரு போராட்டமே நடந்து முடிந்தது. தங்கள் பிரச்சனைகளுக்கு குர்ஆனும், ஹதீஸும் வழிகாட்டாதது போல இவர்கள் நடந்து கொள்கின்றனர். பல ஊர்களில் இவர்களே *அருகருகே போட்டிப் பள்ளிகள். கட்டிச் சண்டையிடும் அவலங்களும் அரங்கேறி வருகின்றன.* குர்ஆனையும், ஹதீஸையும் பின்பற்றாததால் ஒருவர் மற்றவரின் மீது குறை கண்டு எட்டப்பன் வேலை செய்து காட்டி கொடுத்தல், இழிசொற்களால் விமர்சித்தல் போன்ற நாலாந்தர பணிகளில் மூழ்கி விடுகின்றனர்.

“நிச்சயமாக உங்களின் இந்த உம்மத் ஒரே உம்மத்துதான்” என படைத்தவன் கட்டளையிட்டு விட்ட பின்பும், உம்மத்தில் தனித்தனி ஜமாஅத்துக்கள் முஸ்லிமிற்கு தேவையா என சிந்தனை செய்யுங்கள்.

“எவர் அல்லாஹ்வின் பக்கம் (மக்களை) அழைத்து, (ஸாலிஹான) நல்ல அமல்கள் செய்து, “நிச்சயமாக நான் முஸ்லிம்களில் உள்ளவன் என்று கூறுகின்றாரோ, அவரை விட சொல்லால் அழகியவர் யார்?” என அல்லாஹ் 41:33 வது ஆயத்தில் அறிவுறுத்துவதைப் பலமுறை படித்து, சிந்தித்துணர்ந்து, நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டலின்படி 'ஜமாஅத் அல் முஸ்லிமீனில்' (முஸ்லிம்களின் ஜமாஅத்) செயல்படுவோமாக.

---------------------------------------------------

ஐயம் : கடல் நீரில் ஒளுச் செய்யலாமா? தொழும் போது தொழும் இடத்தில் நமக்கு முன்பாக மூக்குக் கண்ணாடி, லெட்டர், பை, கர்சிப் ஆகியவைகள வைப்பது சரியா?

க. ரசூலதன, புரசைவாககம, டீசனனை.

தெளிவு : கடல் நீரில் தாராளமாக ஒளுச் செய்யலாம். ஒளுச் செய்யலாம் என்பதற்கான ஹதீஸ் ஆதாரங்களை ஏற்கனவே அந்நஜாத்தில் வெளியிட்டிருக்கிறோம். தாங்கள் கூறிய பொருட்களை தொழும் இடத்தில் நமக்கு முன்பாக நாம் வைத்துக் கொண்டு தொழுவதற்கு எந்த விதமான தடையும் இல்லை.

ஐயம் : பள்ளியில் அவரது விருப்பப்படி தொழ ஒருவரை அனுமதிக்காவிட்டால், அதற்காக அவர் நீதி மன்றத்தை அணுகினால் குழப்பம் ஏற்படாதா**?** அப்படி அனுமதிக் கப்படாதவர் வீட்டில் ஜமாஅத்தாகவோ அல்லது தனித்தோ தொழுவது சரியா**?** க. ரசூல்தீன், புரசைவாக்கம், சென்னை.

தெளிவு : அவரவர் விருப்பப்படியெல்லாம், ஒருவர் பள்ளிவாசலிலோ அல்லது வேறு எங்குமோ இறைவனைத் தொழக்கூடாது. நீங்கள் கூறுகின்ற ஒருவர் தொழுத விதம் நபி(ஸல்) அவர்களின் நடைமுறையில் உள்ளதாக இருக்குமேயானால், அவரைத் தடுத்தவர்களிடம் பேசிப்பார்த்து மீண்டும் பள்ளியிலேயே தொழ முயற்சிக்கலாம். பேசிப்பார்ப்பதில் பலன் ஏற்படாது எனத் தெரிந்தால், தடுத்தவர்களிடம் நெருக்கமானவர்கள் மூலமாக பேசிப்பார்க்கலாம். தடுக்கப்பட்டவருக்குத் தோன்றும் இதுபோன்ற முயற்சிகளை அவரே மேற்கொள்ளலாம். இந்த முயற்சிகள் எதுவுமே பலனளிக்கா விட்டாலும், அல்லது முயற்சிகள் மேற்கொள்ளாமலே கூட, தடுக்கப்பட்டவர் நீதி மன்றத்தை அணுக உரிமை உண்டு. ஏனெனில் இறையில்லங்கள் இறைவனைத் தொழுவதற்காகத் தானே ஒழிய, தொழ வருபவர்கள் அனுமதிக்கப்படாத இடங்கள் அல்ல.